

மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.


அருதின
வேதாகமத்
துணைவன்
( ராபர்ட் ராபர்ட்ஸ் )
கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்
அளிக்கும்
கிடைக்குமிடம்:
கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்,
த.பெ. எண் 159,
ஹைதராபாத் (ஆந்திரா) - 500 001.
அல்லது
கிறிஸ்டடெல்ஃபியன்ஸ்,
த.பெ. எண் 4237,
பெங்களூர் 560 042


இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 25

- கிருபை
- வஸ்திரம், அலங்காரம், அணிகலன்
- இனம் இனத்தோடே
- கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய முதலாம் நிருபம்
- ஈஸ்டர் தோற்றமும் பொருளும்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# கிருபை

நமது சமுதாயம், நாம் நமது திருப்பலன்களைச் சம்பாதிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. நாம் விளையாட்டுத் திறமைக்காகப் பயிற்சி செய்கிறோம். கூலிக்காக வேலை செய்கிறோம். கல்வித் தகுதிக்காகப் படிக்கிறோம். இதற்கு நேர் எதிராக, வேதாகமம் நமக்குப் போதிப்பது என்னவெனில், நமது இரட்சிப்பை எவ்வளவு புண்ணிய காரியங்கள் செய்வதாலும் நாம் சம்பாதிக்க முடியாது. அதற்காக நாம் கடவுளுடைய கிருபையை முழுவதுமாகச் சார்ந்திருக்கிறோம்.



கவன ஈர்ப்பு : லூக்கா 15:11-32

காணாமற்போன மகனைப் பற்றின உவமை நமக்குக் கடவுளின் அற்புத கிருபையையும் இரக்கத்தையும் அருமையாக எடுத்துக் காட்டுகிறது. தனது மகனுடைய தவறான நடத்தை எவ்வாறாக இருந்தாலும் தந்தை தமது இரக்கத்தைக் காண்பிக்கிறார். அதைப் போன்று, நாம் மனந்திருந்திவரும்போது, தமக்கு இரக்கத்தைக் காண்பித்து, நமது பாவத்துக்குத்தக்கதாக நம்மைத் தண்டியாமல் விடுகிறார்.

1. காணாமற்போன மகனை எப்படி நடத்தியிருக்க வேண்டும்?
2. ஏன் தந்தை மகனிடம் இரக்கம் காண்பித்தார்?
3. சிறியவன் தகப்பனுடைய தயவைப் பெற்றதற்காகப் பெரியவன் எவ்வாறு நடந்து கொண்டான்?

கிருபை என்பது "தகுதியற்றவருக்குக் காண்பிக்கும் இரக்கம்" ஆகும். நமது பாவங்களை மன்னிப்பதாலும், நமது பாவங்களுக்குத் தக்கதாக நம்மைத் தண்டியாமல், தமது இரக்கத்தினால் நம்மை புத்திரசுவிகாரம் செய்வதன் மூலமும் கடவுள் தமது கிருபையை வெளிப்படுத்துகிறார். தாவீது அதைக் குறித்து இப்படி எழுதினான்.

*"அவர் நம்முடைய பாவங்களுத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது."* (சங்கீதம் 103:10,11)

### கடவுளின் கிருபைக்காக நமது தேவை

தேவகிருபையை நாம் உணர வேண்டுமானால், முதலாவதாக நமது பாவங்கள் கடவுளைவிட்டு நம்மைப் பிரிக்கிறது என்பதை அறிய வேண்டும். ஏசாயா எழுதுகிறான்:

*''இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை, கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உன்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடி அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது."* (ஏசாயா 59:1-2)

கடவுள் பாவத்தை எவ்வளவாய் வெறுக்கிறார் என்பதையும், பாவத்தினிமித்தம் அவரோடுள்ள நமது உறவு எவ்வளவாகப் பாதிக்கப்படுகிறது என்பதையும் நாம் போற்றுவது அவசியமாகிறது. நாம் சரியானவைகளைச் செய்யும்படி எவ்வளவு முயற்சித்தாலும் நாம் ஏதாவது தவறு செய்து விடுகிறோம். இது நமது இயல்பு. தாவீது சொன்னான்:

*"நீர் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல. தீமை உம்மிடத்தில் சேருவதில்லை. வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள். அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்."* (சங்கீதம் 5:4-5)

நாம் தேவனிடமிருந்து பாவிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், தேவனோடு கூட ஒப்புரவாகும்படி ஒருவழி உண்டு. நமது பாவத்தை மூடவும், கழுவி நம்மைச் சுத்திகரிக்கவும் தக்கதான ஒரு வழியைத் தேவன் வைத்துள்ளார். இப்படி அவரிடம் சீர்பொருந்தக் கூடும். நமது சொந்த பாவங்களை மூடிக்கொள்ள நம்மால் முடியவே முடியாது. பாவப்பரிகாரத்திற்காக பாவநிவாரணப் பலி மற்றும் மனந்திரும்புதலின் வழியாக மட்டுமே தேவன் இரட்சிப்புக்கு வழி செய்துள்ளார். பழைய ஏற்பாடு காலத்தில் மிருகங்கள் பலியிடப்பட்டுவந்தன. ஆனால் அவைகள் போதுமானதாக இருக்கவில்லை. இயேசு வந்தபோது அவர் கடவுளுக்கு முழு கீழ்ப்படிதலோடு ஜீவித்தார். பின்பு பாடுபட்டு சிலுவையில் மரித்தார். அவர் பூரணமான பலியாகப் பாவத்திற்குப் பரிகாரம் செலுத்தினார்.

நாம் நமது பாவங்களிலிருந்து மீட்கப்படும்படி கடவுள் நமக்குக் கொடுத்த சந்தர்ப்பம் அவருடைய இரக்கம் நிறைந்த ஈவுஆகும். இயேசு நமது பாவங்களினிமித்தம் பலியானதினாலே கடவுளுக்கு முன் பாவமில்லாமல் காணத்தக்கதாக பாவம் மூடப்பட்டுவிட்டது. நாம் எல்லோரும் பாவத்தினாலே கறைப்பட்டவர்களானாலும், கடவுளுடைய கிருபையினாலே நாம் மன்னிப்பு பெற்று கழுவப்படுகிறோம். *''உங்கள் பாவம் சிவப்பு ஆனாலும் பஞ்சைப்போல வெண்மையாகும்."* ஏசாயா 1:18 என்று அவர் கூறியுள்ளார். என்ன வித்தியாசம்!

அவருடைய கிருபையினாலே வரும் நீதி

இயேசுவின் பலியின் மூலமாக யாருடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்களுடைய பாவத்தைக் கடவுள் கணக்கிடமாட்டார். அதற்குப் பதிலாக, அவைகள் "நீதி" யாகக் கணக்கிடப்படுகிறது. ரோமரின் நிருபத்தில் பவுல் விளக்குகிறான்:

*"ஆபிரகாம் விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது."* (ரோமர் 4:3)

ஆபிரகாமுடைய "விசுவாசம்" மூலமாக, அவனுடைய நற்கிரிகைளினால் அல்ல, தேவன் அவனை நீதிமான் என்றழைத்தார். அதைப்போலவே, நமக்கும் நற்கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினாலே, கடவுளுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக நிற்கச் செய்கிறது.



*"ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்."* (ரோமர் 4:5).

"நீதிமானாக்கப்படுதல்" என்றால், அவனை நீதிமான் என்று கணக்கிட்டு அழைப்பது ஆகும். நாம் கடவுளின் கிருபையினால் மாத்திரம் நீதியாகக் கருதப்படுவோம்.

"அது இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியே. விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும். வித்தியாசமே இல்லை. *எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்."* (ரோமர் 3:22-24)

நமது பாவங்கள் எவ்வளவு மோசமாக இருந்தாலும், நாம் மனந்திரும்பும் பட்சத்தில் அவைகளை மூடவும் மன்னிக்கவும் கடவுளின் கிருபை போதுமானது. நாம் தேவகிருபையை ஏற்றுக் கொள்ளும் போது, பாவமன்னிப்பைப் பெற்று, நமது பாவத்தை முதுகுக்குப் பின்னால் போடமுடியும். நாம் குற்ற உணர்வினால் கஷ்டப்படாமல் தேவனோடு சரியான உறவில் இருப்போம்.

### சில பொருத்தமான வேதபகுதிகள்

**கிருபையினாலே இரட்சிப்பு:** அப்போஸ்தலர் 15:11; ரோமர் 3:22-24; 4:1-5; 5:1-2, 15-21; 11:5-6; எபேசியர் 1:7; 2:5-9; தீத்து 2:11; 3:7.

**தேவனுடைய பொங்கும் கிருபை :** சங்கீதம் 103:1011; 2 கொரிந்தியர் 9:8-14; 1 தீமோத்தேயு 1:14; எபிரேயர் 4:16.

**நமது வாழ்வில் கிருபை:** மத்தேயு 18:21-35; எபேசியர் 4:29; கொலோ செயர் 4:6; எபிரேயர் 13:9; யாக்கோபு 4:6; 2 பேதுரு 3:18.

கிருயைகளைவிட கிருபையில் அதிகமாய் நம்பிக்கை

நமது நற்கிரியைகளினால் அல்லது வேதவாக்கியங்களின் அறிவினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பதைத் தொடர்ந்து ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். தேவனுடைய இராஜ்யத்தில் இடம் பெறும்படி நாம் புண்ணிய கிரியைகளைச் செய்து வருகிறதினால் எந்தப் பயனும் இல்லை. நாம் ஏற்கனவே செய்துள்ள தீவினைகளை மாற்றும்படி நற்கிரியைகள் செய்து வந்தாலும் பயனில்லை.

நமது பாவங்களை நாம் அறிக்கையிட்டு அவருடைய கிருபையைப் பெற வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். நமது இரட்சிப்பைச் சம்பாதிக்கும்படி புண்ணிய காரியங்கள் செய்வதைவிட, அவர் ஏற்கனவே நமது இரட்சிப்புக்காக வைத்துள்ள கிருபைக்கு நன்றியுள்ளவர்களாக நற்கிரியைகளைச் செய்துவந்தால் அது மேலானது.

நமது கிரியைகள் நம்மை இரட்சிக்க மாட்டாது என்பதற்காக நன்மை செய்வதை நிறுத்தி, நாம் நினைத்தபடி யெல்லாம் செய்ய ஆரம்பிக்கக் கூடும். பவுல் அப்போஸ்தலன் முதல் நூற்றாண்டு விசுவாசிகளை எச்சரித்து, கிருபை பெறுவதற்காகப் பாவஞ்செய்யலாம் என்ற எண்ணத்தைக் கண்டித்து கடிதம் எழுதினான்.

*"ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும் படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?"* (ரோமர் 6:1-2)

தேவனுடைய கிருபையை நாம் வீணாக்க அவர் அனுமதிக்க மாட்டார்.

### அவர் கிருபைக்காக நன்றி சொல்லுதல்

கடவுளுக்கு குறைந்தது மூன்று வழிகளில் நாம் நன்றியுள்ளவர்களாக ஜீவிக்கலாம்.

1. அவர் கொடுத்த இரட்சிப்பின் ஈவுக்காக கடவுளுக்கு ஜெபத்தில் நன்றி சொல்லலாம். காலோசெயர் 1:10-12.

2. நமது இருதயங்களில் "சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் கீர்த்தனைகளாலும் கர்த்தரைப் பாடி" துதிக்கலாம். காலோசெயர் 3:16.

3. பிறரிடம் கிருபை காட்டலாம். "மன்னியாத ஊழியன்" பற்றிய உவமையில், கடவுளுடைய கிருபையைப் பெற்றவர்கள் பிறரிடம் அதைப் பிரதிபலியாமல் இருப்பதன் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. மத்தேயு 18:23-25.

நாம் தேவனைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கும்படிக்கு நமக்கு ஆலோசனை சொல்லப்படுகிறது. இதனால் நாம் பிறரிடம் கிருபை காண்பிக்கவும் கிருபையில் வளரவும் செய்கிறோம். அது நமது பேச்சிலும், நமது குணத்தின் வலிமையிலும், பிறரை மன்னிப்பதிலும், மற்றெல்லா வகையிலும் காணப்பட வேண்டும். எபேசியர் 5:1.

### பொருளடக்கம்

தேவனுடைய கிருபை ஈவாக நமக்கு அருளப்பட்டது. அந்த ஈவை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் நமது தீர்மானத்தில் உள்ளது. தேவனுடைய ஈவை ஏற்றுக் கொள்வதற்கு அநேக படிகள் உள்ளன:

1. தேவன் இருக்கிறார் என்று நம்ப வேண்டும்.
2. நாம் பாவிகள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.
3. நமது பாவத்தைக் குறித்து மனஸ்தாபத்துடன் மனந்திரும்ப வேண்டும்.
4. இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு கிடைக்கும் என்று விசுவாசிக்க வேண்டும்.
5. ஞானஸ்நானம் பெற வேண்டும்.
6. பாவமன்னிப்பின் நிச்சயம் பெறவேண்டும்.
7. கடவுளை மையமாகக் கொண்ட ஜீவியம் நடத்த வேண்டும்.

*"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு."* (எபேசியர் 2:8).



# வஸ்திரம், அலங்காரம், அணிகலன்

அப்படியே, "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, விலையேறப் பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும்... தங்களை அலங்கரிக்க வேண்டும்." (1 தீமோத்தேயு 2:9,10).



"வஸ்திரம்" என்ற இந்த வார்த்தை ஆடையைவிட அதிகமான அர்த்தம் அடங்கியது. அந்த ''ஒழுக்கம்'' அல்லது "நடத்தை" என்றும் அர்த்தங் கொள்ளலாம். இந்த "வஸ்திரம்" என்பதில் அங்க அசைவுகளும் தோற்றமும் அதிகமான பங்கு வகிக்கிறது. இது, நமது வாழ்வில் சத்தியத்தை அணிந்து கொள்வது குறித்த பல வேத பகுதிகளை நமது மனதுக்குக் கொண்டுவருகிறது (யோபு 29:14; சங்கீதம் 132:9; 1 பேதுரு 5:5; ஏசாயா 11:5; வெளிப்படுத்தின விசேஷம் 19:7,8). பவுல், அடக்கமான குணத்தின் மூலம் உள்ளான சீரை எதிர்பார்க்கிறார். வெளிகாட்டும் "பகட்டான கற்பை" அல்ல; "தெளிந்த புத்தி" தெளிவான சிந்தையையும் தீர்மானத்தையும் கொண்டது. அது பழக்கப்பட்ட உள் ஆட்சியைக் கொண்டு வீணான நடத்தை மற்றும் ஆசை இச்சைகளைக் கட்டுப்படுத்துகிறது. "தெளிந்த புத்தி" சரியென்று தீர்மானிப்பதை "நாணம்" செயல் படுத்துகிறது.

இப்படிப்பட்ட குணலட்சணங்களான நாணம் மற்றும் தெளிந்த புத்தியைக் கொண்டு சகோதரிகள் தங்களை உடுத்திக்கொள்ள வேண்டும். அது தேவனுடைய கண்களில் பிரீதியாய் இருக்கும்.

கர்த்தர் மனுஷன் பார்க்கிறபடி பார்ப்பதில்லை. *"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்"* (1 சாமுவேல் 16:7).

தேவன் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் காண்கிறார். (எபிரெயர் 4:12). நமது "அலங்காரம்" தேவனுடைய மனதைச் சந்தோஷப் படுத்துகிற குணலட்சணங்களை உடையதாக இருக்க வேண்டும். இந்த வசனங்கள் சிறப்பாக பெண்களுக்கென்று எழுதப்பட்டாலும் அது எல்லோருக்கும் பொருந்தும்:

“மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது.” (1 பேதுரு 3:3-4).

பவுல் தன்னடக்கத்தின் மதிப்பைப் போற்றுகிறார். வீணானதும் மாறி வருகிறதுமான இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிக்க மறுப்பது குறித்துப் பேசுகிறான். ஒரு சகோதரன் அல்லது சகோதரி இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கும்படி எவ்வாறு தங்களை உடுத்தி, அலங்காரம் பண்ணி அணிகலன்களை அணிந்துக் கொள்கிறார்கள்? ஆண்களும் பெண்களும் பிறந்து, சில மாற்றங்களைத் தங்கள் வாழ்வில் கண்டு, வயதாகி மரிக்கின்றனர். வரும் சந்ததி அவர்களுடைய இடத்தைப் பிடிக்கிறார்கள். இந்த உலகத்தின் வேஷம் கடந்து போகிறது. அவை சொற்பகாலம் மட்டும் இருந்து, மாறிப்போவது நிச்சயம். ஆனால் பரலோகத்திலுள்ள சர்வவல்ல தேவன் ஒருபோதும் மாறுவதில்லை. இந்த நியாயமான காரணத்தினிமித்தம், (அது நடைமுறைக்கு ஒத்தவைகளாயிருப்பதால்) தேவ பக்தியற்ற உலகத்தின் கடந்து போகும் வேஷத்தை நாம் கடிந்து ஒதுக்க வேண்டும்.

அடிமைத்தன நுகத்திற்கு உட்பட்டவர்கள்போல உலகத்தின் வேஷத்தைத் தழுவி கொள்ளுகிறபடியால், நாம் தவறாக அதைச் சார்ந்திருப்பதுபோல் காட்டிக் கொள்ளுகிறோம். தேவனுடைய தயவைவிட அதிகமாக உலகத்தின் தயவை நாடுகிறோம். நாம் தேவ அந்நியோனியத்தைவிட லௌகீக சம்பந்தத்தை பெரிதாய் மதிக்கிறோம்.

மேலும் மினுக்கான ஆடை, சிகை அலங்காரம், ஒய்யாரமான அலங்கரிப்பு இன்றைய உலகத்தின் வேஷத்திற்கு ஒத்ததாக மாறிவருகிறபடியால், அதைப் பயன்படுத்துகின்ற நமது நடத்தை மற்றும் எண்ணம் பிறருக்கு எடுத்துப் பறை சாற்றுகிறது. இந்த விதமான ஜீவியம் கிறிஸ்துவுக்குள் வாழும் ஒரு விசுவாசிக்குத் தேவையற்றது. நாம் நமது நடைமுறையில் உலகத்தைவிட்டு பிரித்தெடுக்கப் பட்டவர்கள் என்பதைக் காண்பிக்க வேண்டும். ஆதலால் நாம் அடக்க முள்ளவர்களாகவும் சுத்தமாகவும் ஏற்கத்தக்கதாகவும் - அற்பத்தனமாக உடுத்தாமல், ஊதாரி செலவு செய்யாமல், தலைவாரி முக அலங்காரஞ் செய்யும்படி அதிகநேரம் எடுக்காமல் இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, சிறப்பாக சகோதரிகள், கற்புள்ள (மாயமற்ற)வர்களாக உடை நடைபாவனையில் இருக்கவேண்டும்.



# இனம் இனத்தோடே

வான்கோழிகளோடு செயலாற்றும்போது, கழுகுகளோடு உயர எழும்பிப் பறப்பது கடினம், “ஒரு பெரிய அலுவலகித்தின் மேசையில் இந்த வாசகம் வைக்கப் பட்டிருந்தது.

நம்மைச் சுற்றியுள்ளவர்களால் நாம் பாதிக்கப்படுவது உண்மை. உடன் ஊழியர்களை நாம் ஒரு வான்கோழிக் கூட்டம் என்று கருதினாலும், நாம் உயர எழும்பிப் பறப்பதை அது தடைசெய்யக்கூடாது இது கடினமனதாயிருக்கலாம் ஆனால் கூடாத காரியமல்ல. நாம் உலகத்திலிருந்தாலும், உலகத்தினராயிருக்கக் கூடாது.

உலகத்திலுள்ளவர்களோடு சேர்ந்து நாம் பறக்க முடியாது ஏனெனில் அவர்கள் எல்லாருமே தவறான திசையில் போய்க்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் நாம் அந்த மந்தையில் சேர்ந்தவர்களென்றால் நமக்குக் கஷ்டம்தான். “இனம் இனத்தோடே” என்றொரு பழமொழி உண்டு. ஆகவே நாம் ஒரு கூட்டம் ‘வான்கோழிகளோடு’ வேலைசெய்தாலும் கழுகுகளைப் போல் நாம் எழும்பி உயர உயரப் பறந்து போகவேண்டும்.

“கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து நாம் எழும்பும் நாள் பற்றி ஏசாயா பேசுகிறார். வருங்காலத்தில் அவ்விதம் செய்ய நாம் நம்பிவிரும்பினால், மற்ற பறவைகள் போலக் குரலெழுப்பிக்கொண்டு அலையக்கூடாது. நாம் நம் பணியிடங்கள் அல்லது பள்ளியில் மற்றவர்களின் வான்கோழித்தனமான பேச்சுக்கும் மேலாக எழும்பி நம் ஆண்டவருக்குச் செய்யவேண்டிய நம் சேவையைச் செய்யவேண்டும்.”

உலகை நேசிக்கும் நம் கூட்டாளிகளை ஆவிக்குரிய வான்கோழிகள் என நினைக்கத் தோன்றாமலிருக்கலாம் ஆனால் பவுல் என்ன சொல்கிறார் என்பதை நாம் கவனமாய் வாசிக்க வேண்டும்.

“இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக்கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப் போகவேண்டியதாயிருக்கமே,” இப்படிப்பட்ட மக்களோடு எவ்விதத்தொடர்பும் இருக்கக்கூடாது என்று கூறுவது மனித இனத்தில் இந்தப் பாவங்கள் மிகவும் சாதாரணமாகிவிட்டன என்பதை விளக்குவதாயுள்ளது. பவுலின் காலத்தில் இது உண்மையாயிருந்ததென்றால், இன்றும் அது உண்மையாய்த்தான் இருக்கிறது.

ஆகவே நாம் என்ன செய்ய வேண்டும்? கழுகுளோடு சேர்ந்து எழும்பிப் பறக்க விரும்புகிறோம். வான்கோழிகள் நம்மைச் சூழ்ந்துள்ளார்கள் பரவாயில்லை,

கழுகாயிருப்பதனால் அவர்களுக்கும் மேலாக நாம் எழும்பிச் சிறகடித்துப் பறக்கலாம். அவர்களின் பொல்லாத செயல்களில் பங்கு கொள்ளாமலிருக்க முடியும்.

நமக்காக, இயேசு தம் பரமபிதாவிடம் கீழ்க்கண்டவாறு ஜெபித்தார். *"நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன், நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல, ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல."*

ஆகவே, நாம் வான்கோழியின் திறமை மற்றும் குணமுடைய மக்களோடு வேலை செய்யவேண்டியிருந்தாலும் அல்லது பள்ளிக்குச் செல்ல வேண்டியிருந்தாலும், நாம் சோர்வடைந்துவிடக்கூடாது. உலகம் முழுவதும் அத்தகைய மக்களால் நிறைந்திருக்கிறது. ஆனால் நாம் தொடர்ந்து நம் பேச்சிலும் செயலிலும் உயர உயர எழும்பிச் செல்வது முக்கியம். வான்கோழிகள் உரத்துக் கத்தினாலும் அதில் பொருள் எதுவும் இருக்காது. இதை வெட்டிப் பேச்சுக்கும் வீணான உரையாடலுக்கும் இணையாகக் கூறலாம். நாம் எத்தனை முறை வான்கோழிகளைப் போன்று ஒலித்திருக்கிறோம்?

கழுகுகளோடு உயர எழும்பிப் பறப்பது கடினமாயிருக்கலாம்; ஆனால் அது கூடாதது அல்ல. பவுலோடு சேர்ந்து நாமும் கூட "என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" எனக் கூறலாம்.

நம் ஆண்டவர் வரும்போது மற்ற எல்லா வான்கோழிகளோடு சேர்ந்து வான்கோழிக் கூண்டருகே சத்தம் போட்டுக் கொண்டு செயல்படுகிறவர்களாய்க் காணப்படாமலிருந்தால் நல்லது. "நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டேன்..." என்று இயேசு பகர்ந்தார்.

கழுகுகள் வான்கோழிகளிலிருந்து வேறுபட்டவை என்பது போல், நாமும் உலகத்திலிருந்து வேறுபட்டவர்கள். திரும்பவும் ஆண்டவர், என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு - ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்." என்றார்.



# கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய முதலாம் நிருபம்

**பின்னணியம்**

அகாயாவிலுள்ள (கிரீஸ்) கொரிந்திய சபை, பவுலின் இரண்டாவது அருட்பணிப் பயணத்தில் பவுலால் ஆரம்பிக்கப்பட்டது அப்போஸ்தலர் நடபடிகள் 18ம் அதிகாரத்தில் எழுதப் பட்டுள்ளது. பட்டணத்தில் தமக்கு அநேக ஜனங்கள் இருப்பதாக ஒரு தரிசனத்தில் ஆண்டவர் கொடுத்த உறுதிக்குக் கீழ்ப்படிந்தவராய், பவுல் 18 மாதங்கள் (வ.11) அங்கேயே தங்கினார். கொரிந்திய சபை, இப்படி ஒரு பெரிய கிறிஸ்தவ மையமானது. பவுல் அங்குள்ள மக்களுக்கு நிருபங்களை எழுதினார். புதிய ஏற்பாட்டில் அவைகள் மீக நீண்ட நிருபங்கள். விசுவாசம், வாழ்க்கையில் நடந்து கொள்ளவேண்டிய விதம் பற்றி நம்மெல்லாருக்கும் தேவையான போதனை அவைகளில் அடங்கியுள்ளன.

கொரிந்திய சபையிலிருந்த அநேக சகோதரர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன் வேறுமதத்தினராயிருந்தனர். பொருள்கள் மற்றும் செல்வத்தில் பற்றுடையோர் மற்றும் ஒழுக்கநெறியற்றவர்கள் நிறைந்த நகரத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். ஆகவே, மெய்யான அன்பு, கிறிஸ்துவிலுள்ள விடுதலை, தேவஞானம் மற்றும் ஐக்கியம் போன்ற ஆவிக்குரிய வாழ்க்கையின் கொள்கைகளைப் புரிந்துகொள்வது அவர்களுக்குக் கடினமானதாக இருந்தது. மேலும் ஆட்களைப் பார்த்து, அவர்களின் பேச்சாற்றலைக் கேட்டு எளிதில் அவர்கள் பக்கம் சாய்ந்துவிடக் கூடியவர்களாயும் இருந்தார்கள்.

சபையார் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில்தரவும், உலகப்பிரகாரமான நடவடிக்கை மற்றும் கள்ளப் போதனையைத் திருத்தவும் பவுல் அப்போஸ்தலன் முதலாம் நிருபத்தை எழுதினார். இன்று நாம் வாழும் காலமும் அதே போல் தான் இருக்கிறது. முதலாம் நிருபத்தில் நமக்கெனப் பாடங்கள் உள்ளன. இரண்டாம் நிருபம், பவுலின் மேல் அவர் பகைஞர்களில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் தருவதாக உள்ளது. அப்பகைஞர்கள் பவுலுக்கிருந்த அதிகாரத்தைக் குறைக்க முயன்றதோடு, அவர் வழிநடத்திய மக்களை வஞ்சித்துத் தங்களைப் பின்பற்றச் செய்ய முயன்றனர்.

**பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்**

கொரிந்திய சபையிலிருந்த சகோதர சகோதரிகளிடையே ஒரு பெருந்தவறு இருந்தது. அவர்களின் அநேக பிரச்சினைகளுக்கு அதுவே காரணமாயிருந்தது அது ஒற்றுமையின்மை. அவர்கள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இதற்குக் காரணம், சபைக்குள்ளே போட்டி குழுக்கள் இருந்தது தான். முதல் அதிகாரத்தில் (வ.10) முதலாவதாக அதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தன் முதல் நிருபத்தில் திரும்பத் திரும்ப அதைப் பற்றி எழுதுகிறார். கொள்கைகளை அவர்கள் முன்வைக்கிறார். அவர்களின் நடவடிக்கை பற்றிக் கூறுகையில், தம்மையும்,



சபையும் முன்மாதிரிகளாக, எடுத்துக்காட்டுகளாக வைக்கிறார். இவர்கள் (தலைவர்களும் பவுலும்) யாருமே போட்டியை ஒத்துக்கொள்வதில்லை. சபையின் தலைவர் கிறிஸ்துவே. போதித்து, இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்கள் அனைவருமே, அவருக்குப் பதிலாக அவ்வேலைகளைச் செய்கிறார்கள். முதலாம் அதிகாரம் இப்படி முடிகிறது.

*''நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்... மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்."* காரியம் எந்த அளவிற்கு முக்கியமானதாயிருந்ததென்றால், பவுல் 3ம் அதிகாரத்திலும் அதைப் பற்றி எழுதிகிறார். 2ம் அதிகாரத்தில், *"நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப் பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்"* (வ.12) எனக் காட்டுகிறார். *அது ஆவிக்குரிய சிந்தை - அதாவது கிறிஸ்துவின் சிந்தை (வ.16) ஆனால் 3ம் அதிகாரம் அவர்களைக் கடிந்து கொள்கிறது. அவர்கள் ஆவிக்குரியவர்களல்லவென்றும், மாம்சத்துக்குரியவர்களென்றும் கூறுகிறது. ''பொறாமையும், வாக்குவதாமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா ?"* **(3:3)** கிறிஸ்து, பிரசங்கியார், இரட்சிக்கப்பட்டவன் ஆகியோரிடையேயுள்ள 'மூவழி (3வழி) உறவை விவரிக்க இரண்டு காரியங்களைச் சொல்லுகிறார். முதல் எடுத்துக்காட்டு இயேசு பயன்படுத்திய விதைக்கிறவனும் விதையும் என்ற உவமையை அடிப்படையாகக் (மத்தேயு 13:3-23) கொண்டது. இயேசு தான் முதல் 'விதைக்கிறவர். பிரசங்கிக்கிறவர்கள் அனைவரும் விதைக்கிறவர்கள். விதை இப்போதும் தேவனுடைய வசனம்தான். இப்பொழுது கொரிந்தியர்கள் கிறிஸ்துவின் அறுவடையாவார்கள். விதை பவுலால் விதைக்கப்பட்டது. அப்பொல்லோவால் நீர் பாய்ச்சப்பட்டது என 18ம் அதிகாரத்தில் எழுதப் பட்டுள்ளது. தங்களைப் பின்பற்ற ஆள்வேண்டுமெனப் போட்டிபோடும் போட்டியாளர்கள் அல்ல அவர்கள். ஆனால் தங்கள் வேலைக்குத்தக்க பலனைப் (கூலி) பெறும் *''தேவனுக்கு உடன் வேலையாட்கள்" (3,8,9)*

இரண்டாவது தேவன் வாசம்பண்ணுவதற்கென கட்டப்பட்ட ஆலயம். அது ஒரு ஆவிக்குரிய ஆலயம். அந்த ஆலயத்திற்கான கட்டுமான பொருட்கள் விசுவாசிகள் அந்தக் கட்டுமான பொருட்கள் அவருடைய வார்த்தையில் கூறப்பட்டுள்ள தகுதியுடையவர்களாயிருக்க வேண்டும் எல்லாக்காலங்களிலும், ஒவ்வொரு விசுவாசியும், நாம் உட்பட, இந்தச் செய்தியைக் கவனித்து, நியாயத் தீர்ப்பின் நாளிலே தகுதியான கட்டுமானப் பொருளாயிருப்போமா என உறுதி செய்து கொள்ளவேண்டும். இந்தப் பொறுப்பைப் பற்றி பவுல் 11ம் அதிகாரத்தில் நினைவு ஆராதனை குறித்துப் பேசும் போது குறிப்பிடுகிறார். "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில்






பானம்பண்ணக்கடவன்" (வ.28) ஏனெனில் "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயத்தீர்க்கப்படோம்'' (வ.31)'' 3ம் அதிகாரத்தில் தேவனுடைய ஆவிக்குரிய ஆலயத்தில் தகுதியற்ற கட்டுமானப் பொருட்களான ''மரம், புல், வைக்கோல்'' ஆகியவைகளுக்கு அக்கினியான நியாயத்தீர்ப்பு இருக்கும் என பவுல் கூறுகிறார். ஆனால் விலையேறப் பெற்றதும் உத்தமுமான கட்டிடம் கட்டுபவர்கள் புடமிடப்படுவார்கள். (வசனங்கள் 12-15). ஒரு பரிசுத்த ஆலயத்திற்குப் பரிசுத்த கட்டுமான பொருட்கள் தேவை. ஏனெனில் அஸ்திபாரம் பரிசுத்தமானது - அது இயேசு கிறிஸ்து (வ. 11). ஞாபகார்த்த ஆராதனையில் தேவனுடைய சரீரத்தை நாம் நிதானித்து அறிய வேண்டும். (11:29) நம்முடைய பரிசுத்த அழைப்புக்கு ஆதாரமாக தம்மை பலியாக்கின அவரோடு நாம் எத்தகைய தொடர்பிலிருக்கிறோம் என நம்மையே ஆராய வேண்டும். ஆனால் "கர்த்தரின் சரீரம்" பலியாகக் கொடுக்கப்பட்ட அவருடைய சரீரம் மட்டுமல்ல, அவருடைய ஆவிக்குரிய சரீரமாக பரிசுத்த அழைப்பைப் பெற்ற நம்மையும் தான் அது குறிக்கிறது. தனி நபர்களாலான கிறிஸ்துவின் சபை ஒற்றுமையாகவும் பரிசுத்தமாகவும் இருக்கவேண்டும் என பவுல் கொரிந்தியருக்குப் போதிக்கிறார். துவக்க அதிகாரத்தில் கொரிந்திய சபையின் முதல் தவறு ஒற்றுமையின்மையும் போட்டிச் சண்டையும் என பவுல் குறிப்பிடுகிறார். 11ம் அதிகாரத்தில் திரும்பவும் அதுவே மையப் பொருளாக இருக்கிறது. 12ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாக அவர்களின் பொறுப்புகள் யாவை என விவரிக்கிறார். "எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார் (12)... *"நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்."* (27) தேவனுடைய பரிசுத்த ஆலயத்தில் பொருள்களெல்லாம் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்பது போல் (3:17) கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களும் இருக்கவேண்டும். (6:15-20) அவர்களுக்கு இருந்தது போல நமக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை இல்லாவிடினும் நமக்குக் "கிறிஸ்துவின் சிந்தை" (2:16) இருக்க வேண்டும். கொரிந்திய சபையினர் தங்களின் ஒருவன் கற்பிழந்து தவறாக நடந்து கொண்டதை சகித்துக் கொண்டாலும் (5:1) அந்த அதிகாரத்தின் மீதிப்பகுதி தவறு செய்தவனோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளக் கூடாது என வற்புறுத்துகிறது. *"அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப் போடுங்கள்."* (வசனங்கள் 11-13)

ஒரு சரீரத்தின் ஆரோக்கியமும், திறமையும் அதன் அவயவங்களின் ஆரோக்கியத்தையும், தலை சொல்வதற்கு அவைகள் பதில்வினை செய்வதையும் பொறுத்திருக்கிறது. இந்த சரீரத்தின் தலை கிறிஸ்து. அவரின் ஆணைகள் சத்திய வசனத்தின் மூலம் நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வசனம்

பவுலுக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் இயேசுவினால் பரிசுத்த ஆவியின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் நம் காலம் வரை அவர்களது எழுத்துக்களால் பாதுகாக்கப் பட்டு வந்திருக்கிறது. மேலும் அந்த அப்போஸ்தலர்கள் கள்ளப் போதகர்களை எதிர்த்தார்கள். முதல் நூற்றாண்டு சபைகளும் கூட அவர்களை இனங்கண்டு அவர்களை எதிர்க்குமளவிற்குப் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றிருந்தன. இன்று நமக்கிருக்கும் வேதவாக்கியங்கள் அன்று முதன்முதலில் கொடுக்கப்பட்டது போல துல்லியமாகவும் உண்மையாகவும் இன்று நம் கையிலிருக்கும் வேதவாக்கியங்கள் இருக்கின்றன என்பதை உறுதியாக நம்பலாம் - நாமும் அவைகளைக் காத்து, போதித்து அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய வார்த்தைகளோடே எதையாகிலும் கூட்டத் துணிபவனுக்கும், அவருடைய வசனங்களிலிருந்து எதையாகிலும் நீக்கத் துணிபவனுக்கும் பயங்கரமான எச்சரிப்பாக, வெளிப்படுத்தலின் கடைசிப் பகுதியிலுள்ள இயேசுவின் இறுதி வார்த்தைகள் அமைந்துள்ளன. (வெளி 22:18,19).




அதிகாரம் 13, இந்த நிருபத்தின் உச்சகட்டப் பகுதியாகவும் மொத்த கருத்தாகவும் உள்ளது. வசனங்கள் 8-10 கூறும் ஆவியானவர் அருளும் வல்லமைகள், இனி வரும் உலகத்தின் பெலன்களின் ருசியை அனுபவிக்கும் ஈவாகும் ஆனால் அவை நிறைவானது வரும்போது குறைந்துபோம். ஆனாலும் விசுவாசம் நம்பிக்கை அன்பு ஆகிய இம்மூன்றும் ஒருபோதும் ஒழியாது. முதலாம் நூற்றாண்டுக்குப்பின் கடைசி அப்போஸ்தலனின் மரணத்திற்குப் பின் தேவனால் அருளப்பட்ட தீர்க்கதரிசனங்களும் பலவித மொழிகளும் அறிவும் மறைந்து போனாலும், கிறிஸ்துவ வாழ்க்கையின் மூன்று முக்கிய பண்புகள் இன்றும் நிலைத்திருக்கின்றன. அன்பே எல்லாவற்றையும் விட மிகப் பெரியது. ஏனெனில் விசுவாசமும் நம்பிக்கையும் அவை வாஞ்சித்த காரியங்களின் நிறைவேறுதலினால் இடம் பெயர்ந்த பின்னரும் கூட அன்பு மட்டும் என்றும் நிலைத்திருக்கும். தேவன் மற்றும் அவருடைய குமாரனுடைய அன்பினால் வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. கிறிஸ்து அவருடைய பிதாவின் மீதும் நம் மீதும் கொண்டுள்ள அன்பினாலே தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம். ஆனால் நம்முடைய இரட்சிப்பு அவர்கள் (பிதா, குமாரன்) மீதும், ஒருவர் மீது ஒருவரும் கொண்டுள்ள அன்பைச் சார்ந்துள்ளது. கொரிந்திய சபையில் பிரச்சினைகளை உண்டாக்கியது அவர்களின் அன்புத்தாழ்ச்சியே. 13ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அன்பு அவர்களிடத்தில் குறைவு பட்டது. அந்த அன்பு சகோதரர் சகோதரிகள் என்ற குறுகிய வட்டத்தைக் கடந்து வெளியிலுள்ளவர்களுக்கும் பாய்ந்து செல்ல வேண்டும் என்று கடைசி அதிகாரம் கூறுகிறது. நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் எருசலேமில் இருக்கும் ஏழை விசுவாசிகளுக்கான பணமுடிப்பை, பவுல் வரும்போது கொடுக்கத்தக்கதாக, ஆயத்தம் செய்யவேண்டியதை ஊக்குவிக்கும் விதமாக 14ம் அதிகாரம் உள்ளது.



# ஈஸ்டர் தோற்றமும் பொருளும்

ஈஸ்டர் என்று ஒரு பரிசுத்த நாளை அல்லது பருவத்தைக் கொண்டாட வேதத்தில் அறிவுரை இல்லை, இல்லவே இல்லை. ஆங்கில வார்த்தையான 'ஈஸ்டர்' வேதவாக்கியங்களில் ஒரே ஒரு முறைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய 28 இடங்களிலும் மூல கிரேக்க வார்த்தையான 'பஸ்கா' என்றிருக்கிறது. அதைப் 'பாஸோவர்' என்று தான் மொழிபெயர்த்திருக்க வேண்டும்.

'பஸ்கா' எனும் வார்த்தை யூத ஆண்டின் முதலாம் மாதம் (நிஸான்) 14ம் தேதியிலிருந்து 20ம் தேதி வரையுள்ள பஸ்காபண்டிகை மற்றும் பாஸோவர் பண்டிகைக் காலத்தைக் குறிக்கும்.

பாஸோவரின் காரணம்

எகிப்திலிருந்த இஸ்ரவேலின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையானதை நினைவுகூறும் ஒரு யூதப் பண்டிகை. யூதர்கள், பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியிடவேண்டுமெனப் பிதாவினால் கட்டளை பெற்றார்கள். பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை அவர்கள் வீடுகளில் வாசல் நிலைக்கால்களில் பூசவேண்டும். சங்கார தூதன் அவர்கள் வீட்டைக் 'கடந்து போகும்படி' அப்படிச் செய்து தங்கள் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள வேண்டும். பலியிடப்பட்ட இரத்தத்தினால் பாதுகாக்கப்படாத எந்த வீடும் தூதனால் பாதிக்கப்பட்டது - மூத்த மகன், முதலில் பிறந்தவன் இறந்து போனான்.

வாப்போகிற ஒன்றுக்கு அடையாளமாக, அவர்களின் மேசியா பலியிடப்படுவதை - அது நிகழ்ந்தபோது அதைப் புரிந்து கொள்ளாமற்போனார்கள். ஆகவே தேவ ஆட்டுக்குட்டி பலியிடப்பட்ட ரத்தத்தினால் அவர்கள் மூடப்படவில்லை. (பாதுகாக்கப்படவில்லை). அதன் விளைவு அழிவுக்கேற்றதாயிருந்தது. 10 லட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். கி.பி.70க்கும் 135க்கும் இடையில் ஆயிரக்கணக்கானோருக்கும் மேலாக அடிமைகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள்.

லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் பாஸோவர் எனும் பஸ்கா மற்றும் புளிப்பில்லா அப்பப் பண்டிகை குறித்த அறிவுரை மற்றும் விதிகளின் கூறப்பட்டுள்ளன. முதலாம் மாதம் (ஆபிப்/நிசான்) 14ம் தேதி பஸ்கா அனுசரிக்கப்படவேண்டும். புளிப்பில்லா அப்பப் பண்டிகை 15ம் தேதி ஆரம்பமாகி ஏழு நாட்களுக்கு இஸ்ரவேலர் அனைவரும் புளிப்பில்லா அப்பம் உண்ண வேண்டும். புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாம் நாள் ஒரு 'பரிசுத்த நாளா' யிருக்க வேண்டும் - பரிசுத்தக்கூட்டம் கூடும் அந்த நாளில் எந்த இஸ்ரவேலனும் எந்த வேலையும் செய்யக்கூடாது. ஏழாவது நாளும் அவ்விதமே அநுசரிக்கப்பட வேண்டும். இந்த நாட்கள் சாதாரணமாக 7ம் நாள் பரிசுத்த ஓய்வு நாளல்லாமல்

கொண்டாடப்பட வேண்டியவை.

**ஏன் ஈஸ்டர் பண்டிகை**

இதற்கு எளிய விடை என்னவெனில் கி.பி.325ல் கான்ஸ்டன்டைன் எனும் ரோமப் பேரரசன் கிறிஸ்தவத்தை ரோம சாம்ராஜ்யத்தில் ‘மதமாக’ அறிவித்ததால், ரோமர்கள் கிறிஸ்தவமதத்தைத் தழுவிக்கொண்டார்கள். அந்த சாம்ராஜ்யத்தில் பல மதங்களும் அவைகளுக்குரிய கடவுள்களும் ஏற்கனவே இருந்தன. இப்பொழுது, கிறிஸ்தவம் என்ற போர்வையில் தொடர்ந்து அவைகளை ரோமர்கள் ஆராதித்து வந்தனர். பாபிலோனின் சூரியகடவுள் “தம்முஸ்” ‘சந்திரக்கடவுள்’ இஸ்டர் யூதர்கள் உட்ப்பட அநேகருக்கு அஸ்தரோத் என்ற பெயரில் அறிமுகமாகியிருந்தது. வட்டமான ‘கேக்’குகள் செய்து அதன்மேல் T என்ற எழுத்தைப் பொறித்து, சந்திரக் கடவுளாகிய அஸ்தரத்தை வணங்க உபயோகித்ததால் தேவனின் உக்கிரகோபத்திற்கு ஆளானார்கள். இந்த விக்ரகாராதனைக்காக தேவன் அவர்களைப் பயங்கரமாகத் தண்டித்தார். (எரேமியா 7:17,18).

இப்படி ரோம சாம்ராஜ்யம் தழுவிய ‘கிறிஸ்தவம்’ ரோமில் இருந்த ஆதித் திருச்சபையின் நம்பிக்கைகளும் சபையில் வரவேற்கப்பட்ட புறமத்தினரின் நம்பிக்கைகள் மற்றும் பழக்க வழக்கங்களும் எல்லாம் ஒன்று சேர்ந்த கலவையாயிருந்தது. இஸ்டர் பண்டிகைகள் கிறிஸ்தவக் கொண்டாட்டமாக பண்டிகைக்கு முன் 40 நாட்கள் உபவாசம் எனப் புறமதத்தினர் அநுசரித்ததும் சேர்த்துக் கிறிஸ்தவத்தில் நுழைந்தது. அந்த 40 நாட்கள் 40 லெந்து நாட்களாக ஆயின.

**‘ஈஸ்டர்’ என்ற வார்த்தையின் ஆரம்பம்**

புராதனப் பெண்கடவுள் இஷ்டர் நிம்ரோதின் மனைவி செமிரம்ஸ். ஆசீரியாவின் ராணியாகிய இந்த அழகிய பெண் அன்பு மற்றும் இனவிருத்தியின் தேவதையாக வணங்கப்பட்டுவந்தாள். அவள் நிம்ரோத் ‘சூரிய’ கடவுளாக மாறிவிட்டாள் என்றும் அவள் ‘சந்திரக்’ கடவுள் என்றும் தன் மக்களை நம்பவைத்தாள். சந்திரக் கடவுளை ‘இஷ்டர்’ என பாபிலோனியரும், அஸ்தரோத் எனயூதர்களும் மற்றும் அநேகரும், வீனஸ் என ரோமர்களும் அஸ்டார்ட் என பொனிஷியர்களும்





வணங்கிவந்தனர். இந்த மக்களில் அநேகருக்கு முட்டை இனவிருத்தியின் அடையாளமாக இருந்தது. இந்தப் புறமதக் கருத்து கிறிஸ்தவத்திற்குள் கொண்டு வரப்பட்டது. பின் வந்த சந்ததிகளில், முயலும் இனவிருத்தி குறித்த அடையாளமாயிற்று; ஏனெனில் அது வேகமாக இனவிருத்தி செய்து குட்டிகள் போட்டது. ஆகவே முட்டையும் முயலும் இந்தப் புறமதப் பண்டிகையாகிய ஈஸ்டருடன் தொடர்புடையனவாயின. ஈஸ்டர்/இஷ்டர் பண்டிகையின்வேர் (ஆரம்பம்) ‘சூரிய’ கடவுள் மற்றும் சந்திர கடவுள் அரசன் மற்றும் வானராக்கினி என்றழைக்கப்பட்டனர். ஈஸ்டர் கொண்டாட்டங்கள் சூரியோதயத்தின்போது ஆரம்பமாகி சந்திரனை சூரியனின் வெளிச்சம் அழித்தது.

சாக்ஸன் தேவனை ஈஸ்டர் இரண்டாம் நூற்றாண்டு ஐரோப்பாவில் பிரபலமான வசந்த விழாக் கொண்டாட்டம் முயலை பக்திக்குரிய விலங்காகக் கொண்ட சாக்ஸன் தேவதை ஈஸ்டர் என்ற தேவதையை கனம் பண்ண பண்படா ஒலி எழுப்பி இனவிருத்திப் பண்டிகையாகக் கொண்டாடினார்கள். முயல் எப்போதும் சந்திர தேவதையோடு தொடர்பு படுத்தப்படுவது. முட்டையும் முயலும் கடவுள் மற்றும் தேவதையைக் குறிப்பது. புற மதத்தினரின் இனவிருத்திப் பண்டிகைகள் வசந்தகால சமராப்பகல் நாளில் கொண்டாடப்படுவதன் காரணம் அந்நாட்களில் ஆண்-பெண் சக்திகள் சம அளவில் இருப்பதாகக் கருதப்படுகின்றன.

**எது உண்மை?**

நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பது முக்கியமா? ஆம்! கிறிஸ்துவும் அடையாளங்களைப் பயன்படுத்தினார். ‘ஞாபகார்த்தக்’ கூட்டம் எனப் பொதுவாக அழைக்கப்படும் கூட்டத்தில் அடையாளங்களாக அப்பமும் திராட்சரசமும் பயன்படுத்தப்படுகின்றன. கொரிந்துவிலுள்ள சபைக்குப் பவுல் இந்த அடையாளங்களின் அர்த்தத்தைக் கூறுகிறார்:

“நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன், என்னவெனில், *கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் அதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். (லூக்கா 22:19,20 பார்க்க) ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.” (1 கொரிந்தியர் 11:23-26)*

முயல்களையும் முட்டைகளையும் கொண்டாட்டத்தில் சேர்த்துக் கொள்வது எந்தக் கருத்தையும் (பாடத்தையும்) நம் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில்லை. மாறாக சத்தியத்தினின்று நம் கவனத்தைத் திருப்புகிறது. சபைகளும் கிறிஸ்தவ ஆராதனையில் அவைகளின் பொருள் என்ன என்று சொல்ல முடியாமல் இருக்கின்றன. முயல்கள் என்ன என்று சொல்ல முடியாமல் இருக்கின்றன. முயல்கள் மற்றும் முட்டைகளைக் குறித்து யாரேனும் ஏதோ ஒரு விளக்கம் சொல்ல முயன்றால் அது பொய்யும் வேதவசனத்திற்கு முரணானதாயும் இருக்கிறது. ஈஸ்டர் நாள் சரியாக இந்தநாள் என்று குறுப்பிட முடிவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வருகிறது. நம் பிறந்த நாள் ஒரு குறிப்பிட்டநாள். அந்த நாள் வாரத்தில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு நாளாக மாறிவருகிறது. பஸ்கா பௌர்ணமிக்கு அடுத்த ஞாயிறு ஈஸ்டர் என சந்திரனை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்படுகிறது.

ஈஸ்டர் கொண்டாடத்தில் சபை முக்கியப்படுத்துவது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் மரணத்தின் மீது அவர் கொண்ட வெற்றி, ஆனால் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இதைத் தங்கள் வாழ்க்கையில் கொண்டாட வேண்டும்? புதிய ஏற்பாட்டில் முக்கியமான போதனைகளில் ஒன்று உயிர்த்தெழுதல். அது வருடத்தில் ஒரு தடவை அல்ல, நம் வாழ்க்கையில் தினந்தோறும் வெளிப்பட வேண்டும். இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் நம் வாழ்க்கையைத் தினந்தோறும் பாதிக்க வேண்டும். பவுல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார்:

*“கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.”* (ரோமர் **6:3-6**)

ஞானஸ்நானத்தில் நாம் மரிக்கிறோம். அதாவது பாவத்துக்கு மரித்தோம். (ஆவிக்குரிய பிரகாரமாக சிலுவையில் அறையப்படுகிறோம். புது ஆளாக உயிர்த்தெழுந்தோம். ஆகவே தினந்தோறும் ‘உயிர்த்தெழுந்த’ வாழ்க்கையை நாம் வாழவேண்டும். சிலுவையில் அறையப்பட்டு தினந்தோறும் ‘உயிர்த்தெழுந்த’



வாழ்க்கை வாழ்வதென்றால் என்ன? பவுல் இதை அழகாகக் கொலோசே சபைக்கு எழுதுகிறார்:)

*“நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளைத் நாடுங்கள். ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே. அதிலே கிரேக்க னென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருந்தசேதன மில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புற தேசத்தானென்றுமில்லை, அடிமை யென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும் தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடியபொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது; இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒரு வருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.”*
கொலோசெயர் **3:1-17**